**நீதித்துறை நடுவர் நீதிமன்றம், செஞ்சி வட்டம், விழுப்புரம் மாவட்டம்**

**முன்னிலை - திருமதி. பி. வித்யா, எல்.எல்.எம்.,**

**நீதித்துறை நடுவர், செஞ்சி,**

**2026-ஆம் ஆண்டு ஜீலை மாதம் 08- ஆம் நாள், புதன் கிழமை**

**ஆண்டு பட்டிகை வழக்கு எண்.160/2015**

**CNR.No.TNVP18-001322-2015**

| | | |
|---|---|---|
| 1. | காவல் நிலையத்தின் பெயர் மற்றும் குற்றத்தின் குற்ற எண். (Name of the Police Station and Crime Number of the Offence) | காவல் உதவி ஆய்வாளர் அவலூர்பேட்டை காவல் நிலையம். குற்ற எண்.267/2014 |
| 2. | எதிரிகளின் பெயர் (Name) | A1. செல்வராஜ், த/பெ. மருதன், A2. மருதன், த/பெ. மாணிக்கம், A3. அலமேலு, க/பெ. மருதன், A4. ரமேஷ், த/பெ. மருதன், A5. மீனா, க/பெ. ரமேஷ், மேற்படி நபர்கள் அனைவரும் எதப்பட்டு கிராமம், செஞ்சி வட்டம், விழுப்புரம் மாவட்டம். |
| 3. | எதிரிகளின் தந்தை பெயர் (Father's Name) | |
| 4. | எதிரிகளின் தொழில் (Occupation) | |
| 5. | எதிரிகளின் முகவரி (Residence) | |
| 6. | எதிரிகளின் வயது (Age) | |
| 7. | Details of absondance of the accused | --- |
| 8. | குற்ற நிகழ்வு நாள் (Occurrence) | 07.06.2014 |
| 9. | புகார் தேதி (Complaint) | 13.06.2014 |
| 10. | எதிரிகள் கைது செய்யப்பட்ட தேதி (Apprehension) | நீதிமன்ற பிணையில் சென்றுள்ளார்கள். |
| 11. | எதிரி பிணையில் விடுவிக்கப்பட்ட நாள் (Release on Bail) | --- |
| 12 | Period of Bail | --- |
| 13 | Commitment | --- |

| | | | | |
|---|---|---|---|---|
| 14 | Date of Questioning u/s 228 (or) 240 (or) 246 (or) 251 | 10.12.2015 | | |
| 15 | விசாரணை ஆரம்பிக்கப்பட்ட தேதி ( Commencement of Trial) | 19.01.2018 | | |
| 16 | Date of Examination in Chief and Cross Witnesses | | Chief | Cross |
| | | PW1 | 19.01.2018 & 23.01.2018 | -- |
| | | PW2 | 06.02.2018 | 06.02.2018 |
| | | PW3 | 24.04.2019 | 24.04.2019 |
| | | PW4 | 10.06.2019 | 10.06.2019 |
| | | PW5 | 24.02.2021 | 24.02.2021 |
| | | PW6 | 03.05.2024 | 03.05.2024 |
| 17 | விசாரணை முடிக்கப்பட்டது தேதி (Closure of Trial) | 03.05.2024 | | |
| 18 | Date of examination of accused u/s. 313 Crpc (or) 351 of BNSS | 16.10.2025 | | |
| 19 | தண்டனை அல்லது உத்தரவு | 08.07.2026 | | |
| 20 | Details of Victim Compensation Order | --- | | |
| 21 | Grant of Stay by Superior Courts and their Results. | --- | | |
| 22 | எதிரிகள் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் | 1-ம் எதிரியின் மீது இ.த.ச. பிரிவுகள் 147, 294(b), 323, 324 - ன் கீழும், 2 மற்றும் 3 எதிரிகளின் மீது இ.த.ச. பிரிவுகள் 147, 294(b), 323- ன் கீழும், 4-ம் எதிரியின் மீது இ.த.ச. பிரிவுகள் 147, 294(b), 323, 506(i) - ன் கீழும், 5-ம் எதிரியின் மீது இ.த.ச. பிரிவுகள் 147, 294(b) - ன் கீழும் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. | | |

| | | |
|---|---|---|
| 23 | சட்டப்பிரிவுகள் | இ.த.ச. பிரிவுகள் 147, 294(b), 323, 324, 506(ii). |
| 24 | தீர்ப்புரை | சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு அளித்து 1-ம் எதிரியை இ.த.ச. பிரிவுகள் 147, 294(b), 323, 324 - ன் கீழும், 2 மற்றும் 3 எதிரிகளை இ.த.ச. பிரிவுகள் 147, 294(b), 323- ன் கீழும், 4-ம் எதிரியை இ.த.ச. பிரிவுகள் 147, 294(b), 323, 506(i) - ன் கீழும், 5-ம் எதிரியை இ.த.ச. பிரிவுகள் 147, 294(b) - ன் கீழும் குற்றவாளிகள் இல்லை என தீர்மானித்து, எதிரிகளை கு.வி.மு.ச பிரிவு 248(1) – ன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கின்றது. |

இந்த வழக்கானது கடந்த 04.11.2015- ம் தேதி கோப்பிற்கு எடுத்துக் கொள்ளப்பட்டு, இறுதியாக 08.07.2026-ம் தேதி இந்நீதிமன்ற விசாரணைக்காக வந்தபோது, அரசு தரப்பில் அரசு குற்றத்துறை உதவி வழக்கறிஞர் நிலை-2 செஞ்சி அவர்களும், எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.M.சுப்பரமணியன், B.A., B.L., அவர்களும் முன்னிலையாகியும், இருதரப்பு வாதுரைகளையும் கேட்டறிந்தும், இருதரப்பிலும் சமர்ப்பிக்கப்பட்டுள்ள ஆவணங்கள் பரிசீலினை செய்தும், இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.

## தீர்ப்புரை

**அரசு தரப்பு வழக்கு :-**

சாட்சி-1(ரோகிணி)-க்கும் எதிரிகளுக்கும் இடையே நிலப்பிரச்சனை சம்மந்தமாக முன் விரோதம் இருந்து வரும் நிலையில், கடந்த 07.06.2014-ம் தேதி 05.00 மணிக்கு சாட்சி-1(ரோகிணி) எதப்பட்டு கிராமத்தில் இருக்கும் அவருடைய நிலத்தில் மணிலா போட்டுக் கொண்டிருக்கும் போது 1 முதல் 5 எதிரிகள் அங்கு வந்து அதில் 1 ம் எதிரி சாட்சி-2(வெங்கசேடன்) ஐ ஆபாசமாக பேசி தடியால் வலது பக்க தோள் பட்டை மற்றும் இடது முழங்காலில் அடித்துள்ளார். இதனை தடுக்க வந்த சாட்சி-1(ரோகிணி)ஐ அவர் ஆபாசமாக பேசி முதுகில் தடியாலும் கல்லாலும் தாக்கியுள்ளார். 2 ம் எதிரி 1 மற்றும் 2 சாட்சிகளை ஆபாசமாக பேசி கல்லாலும், கைகளாலும் தாக்கியுள்ளார்கள். 3 ம் எதிரி சாட்சிகள் 1, 2-ஐ அசிங்கமாக பேசி வாதியின் தலை முடியை பிடித்து இழுத்து கீழே தள்ளி மார்பின் மீது எட்டி உதைத்துள்ளார். 4 ம் எதிரி சாட்சி-1 ஐ அசிங்கமாக திட்டியும், தொடையில் எட்டி உதைத்தும், மண்ணெணை ஊற்றி கொலுத்தி விடுவேன் என்று மிரட்டியுள்ளார். 5 ம் எதிரி சாட்சி-1 ஐ பார்த்து இந்த தெவடியாவை ஏன் இன்னும் உயிருடன் விட்டு வைக்கிறீர்கள் என்று கூறியுள்ளார். மேற்படி குற்றங்களுக்காக 1 மற்றும் 2 எதிரிகள் மீது இ.த.ச பிரிவுகள் 147, 294(b), 323, 324-ன் கீழும், 3-ம் எதிரியின் மீது இ.த.ச பிரிவுகள் 147, 294(b), 323 -ன் கீழும், 4 -ம் எதிரியின் மீது இ.த.ச பிரிவுகள் 147, 294(b), 323, 506(i) -ன் கீழும், 5 -ம் எதிரியின் மீது இ.த.ச பிரிவுகள் 147, 294(b)-ன் கீழும் தண்டிக்கதக்க குற்றம் புரிந்ததாக அவலுர்பேட்டை காவல் நிலைய உதவி ஆய்வாளர் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**2.** எதிரிகள் இந்நீதிமன்றத்தில் ஆஜரான பின்பு கு.வி.மு.ச.பிரிவு 207- ன் படி வழக்காவணங்களின் நகல்கள் இலவசமாக வழங்கப்பட்டது.

**3. குற்றச்சாட்டுகள்** :-

வழக்காவணங்களின் அடிப்படையில் 1-ம் எதிரியின் மீது இ.த.ச. பிரிவுகள் 147, 294(b), 323, 324 - ன் கீழும், 2 மற்றும் 3 எதிரிகளின் மீது இ.த.ச. பிரிவுகள் 147, 294(b), 323- ன் கீழும், 4-ம் எதிரியின் மீது இ.த.ச. பிரிவுகள் 147, 294(b), 323, 506(i) - ன் கீழும், 5-ம் எதிரியின் மீது இ.த.ச. பிரிவுகள் 147, 294(b) - ன் கீழும் குற்றச்சாட்டுகள் வனையப்பட்டு

குற்றச்சாட்டுகள் குறித்து எதிரிகளுக்கு படித்து காண்பிக்கப்பட்டு, விளக்கப்பட்டு குற்றத்தை ஒத்துக்கொள்ளுகிறீரா? அல்லது விசாரணையை வேண்டுகிறீரா? என வினவப்பட்டது. எதிரிகள் குற்றச்சாட்டுக்களை மறுத்தார்கள்.

எனவே, அரசு தரப்பில் சாட்சிகளை ஆஜர் படுத்தப்படவேண்டுமென்று உத்தரவிடப்பட்டது.

**4. அரசு தரப்பு சாட்சிகளின் சுருக்கம் பின்வருமாறு**:-

அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.6 வரையிலான சாட்சிகள் விசாரிக்கபட்டுள்ளார்கள். அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.7 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**அ.சா.1 (ரோகிணி)** இவ்வழக்கின் சம்பவத்தை பற்றியும், தனக்கு ஏற்பட்ட காயத்தை பற்றியும் மற்றும் புகார் மனு கொடுத்தது பற்றியும் சாட்சியம் அளித்துள்ளார். இவர் மூலம் **அ.சா.ஆ.1 (புகார் மனு)** குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**அ.சா.2 (மணி)** மற்றும் **அ.சா.3 (வேலு)** ஆகியோர்கள் இவ்வழக்கின் பார்வை

மகஜர் சாட்சியாவார்கள். இவர்கள் முலம் **அ.சா.ஆ 2 (பார்வை மகசரில் உள்ள 1 வது கையொப்பம்)** மற்றும் **அ.சா.ஆ.3(பார்வை மகசர்)** ஆகியவைகள் குறியீடு செய்யப்படுகிறது.

**அ.சா.4 (பெரியசாமி)** இவர் இவ்வழக்கின் கண்ணுற்ற சாட்சியாவார்.

**அ.சா.5 (வெங்கடேன் - மருத்துவர்)** இவர் இவ்வழக்கில் காயமடைந்த நபர்களுக்கு கிசிச்சை அளித்தது பற்றியும், காயச்சான்று வழங்கியது பற்றியும் சாட்சியம் அளித்துள்ளார். இவர் மூலம் **அ.சா.ஆ.4** மற்றும் **அ.சா.ஆ.5 (அ.சா.1 மற்றும் அ.சா.2-ன் காயச்சான்றுகள்)** குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**அ.சா.6 ( ராஜா- உதவி ஆய்வாளர்)** இவர் புகாரின் மீது வழக்கு பதிவு செய்து, புலன் விசாரணை மேற்கொண்டு இறுதி அறிக்கை தாக்கல் செய்தது பற்றி சாட்சியம் சாட்சியமளித்துள்ளார். இவர் மூலம் **அ.சா.ஆ.6 (முதல் தகவல் அறிக்கை)** மற்றும் **அ.சா.ஆ.7 (மாதிரி வரைபடம்)** ஆகியவைகள் குறியீடு செய்யப்படுகிறது.

அரசு தரப்புகள் விசாரிக்கப்பட்ட பின்பு, அவர்களது சாட்சியத்தில் எதிரிகளுக்கு பாதகமான பகுதிகள் குறித்து, கு.வி.மு.ச 313 (1) (ஆ) பிரிவின் படி வினவிய போது, எதிரிகள் அந்த சாட்சியங்களை மறுத்தார்கள்.

**5. எதிரிகள் தரப்பு வழக்கு:-**

அவர்கள் மீது பொய் வழக்கு புனையப்பட்டுள்ளது என்பது எதிரிகள் தரப்பு வழக்கு. ஆனால், எதிரிகள் அவர்கள் தரப்பில் எந்த வித சாட்சியங்களும் இல்லை என குறிப்பிட்டார்கள்.

**6. இருதரப்பு வாதங்கள்** :-

அரசு தரப்பில் கற்றறிந்த அரசு குற்றத்துறை உதவி வழக்கறிஞர் அவர்கள் அவருடைய வாதத்தில், அ.சா.1 (ரோகிணி) இவ்வழக்கின் புகார்தாரர் என்றும், அவர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த பிரிவு 156(3)-ன் கீழ் பிறப்பிக்கப்பட்ட உத்தரவின் அடிப்படையில் இவ்வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றும், சாட்சிகள் மற்றும் சான்றவாணங்களின் மூலம் வழக்கை அரசு தரப்பு நிரூபித்துள்ளதாகவும் எனவே, எதிரிகளை தண்டிக்குமாறு வாதிட்டார்.

எதிரிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் வாதிடும்போது, அரசு தரப்பில் குறிப்பிட்டுள்ளது போல், குற்றம் நிகழவில்லை என்றும், அரசு தரப்பு அதன் வழக்கை தகுந்த சாட்சிய சான்றாவணங்களின் படி நிரூபிக்க தவறி உள்ளது என்றும், அ.சா.1 கொடுத்த பொய் புகாரின் அடிப்படையில் அரசு தரப்பில் எதிரிகள் மீது புனையப்பட்ட பொய்யான வழக்கு இது என்றும், எனவே, எதிரிகளை இவ்வழக்கிலிருந்து விடுவிக்குமாறு வாதிடப்பட்டது.

**7. தீர்வுக்குரிய பிரச்சனை:-**

**(அ) எதிரிகள் மீதான குற்றச்சாட்டுக்களை அரசு தரப்பு சந்தேகத்திற்கு அப்பாற்ப்பட்டு நிரூபித்துள்ளதா?**

**(ஆ) ஆம், எனில், எதிரிகளுக்கு வழங்கப்பட வேண்டிய தண்டனை என்ன?**

**8. தீர்வு: -**

**(8.1)** இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது.

அ.சா.1 (ரோகிணி) இவ்வழக்கில் புகார்தாரர் ஆவார். மேற்படி அ.சா.1 நீதிமன்றத்தில் அளித்த குற்ற முறையீட்டின் அடிப்படையில் எதிரிகள் மீது அ.சா.ஆ.6 (முதல் தகவல் அறிக்கை) பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்படி சங்கதியைதான் அ.சா.1 அவரது முதல் விசாரணை சாட்சியத்திலும் சாட்சியமாக அளித்துள்ளார். மேற்படி சங்கதி தொடர்பாக எதிரிகள் தரப்பில் அ.சா.1-ஐ குறுக்கு விசாரணை செய்யவில்லை. இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரியான அ.சா.6 அவரது சாட்சியத்தில், இந்நீதிமன்றம் கு.வி.மு.ச. பிரிவு 156(3)-ன் கீழ் பிறப்பிக்கப்பட்ட உத்தரவின் பேரில் அ.சா.1-ன் மனுவை பெற்று 05.08.2014 அன்று எதிரிகள் மீது அவலூர்பேட்டை காவல் நிலைய குற்ற எண். 267/2014, இ.த.ச. பிரிவுகள் 147, 294(b), 323, 324, 506(ii)-ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ததாக சாட்சியம் அளித்துள்ளார். மேற்படி சங்கதி தொடர்பாக அ.சா.6-னிடம் குறுக்கு விசாரணை மேற்கொள்ளப்படவில்லை. அ.சா.ஆ.6 முதல் தகவல் அறிக்கையை பரிசீலனை செய்ததில், புலன் விசாரணை அதிகாரி சாட்சியம் அளித்துள்ள மேற்குறிப்பிட்ட விவரங்கள் தான் அதிலும் குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி அ.சா.1, அ.சா.6 ஆகியோர்களின் சாட்சியங்களின் மூலமும் அ.சா.ஆ.1 (குற்ற முறையீடு) மற்றும் அ.சா.ஆ.6 (முதல் தகவல் அறிக்கை) ஆகிய ஆவணங்களின் மூலமும் அ.சா.1 நீதிமன்றத்தில் அளித்த குற்ற முறையீட்டின் மூலமாக எதிரிகள் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்பதை அரசு தரப்பு தகுந்த சாட்சிய சான்றாவணங்களின் மூலம் நிரூபித்துள்ளதாக இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

**(8.2)** சம்பவத்தை பொறுத்து வழக்காவணங்களை பரிசீலினை செய்ததில் அ.சா.ஆ.1 (குற்ற முறையீட்டில்) கடந்த 07.06.2014 அன்று மாலை சுமார் 05.00 மணியளவில் அ.சா.1 (ரோகிணி) என்பவரும், அவரது கணவரான வெங்கடேசன் என்பவரும் அவர்களுக்கு சொந்தமான நிலத்தில் மணிலா பயிர் செய்து கொண்டிருந்த போது எதிரிகள் அங்கு வந்து அவர்கள் இருவரையும் ஆபாசமாக பேசி, கொலை மிரட்டல் விடுத்து தடி மற்றும் கைகாளால் அவர்கள் இருவரையும் தாக்கி காயப்படுத்தியதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

**(8.3)** சம்பவ நாள், நேரம் மற்றும் இடம் தொடர்பாக காயமடைந்த சாட்சியான அ.சா.1 ன் சாட்சியத்தையும் மற்றும் கண்ணுற்ற சாட்சிகளான அ.சா.2 முதல் அ.சா.4 ஆகியோர்களின் சாட்சியங்களையும் பரிசீலனை செய்ததில் அ.சா.1 அவரது முதல் விசாரணை சாட்சியத்தில் சம்பவமானது சுமார் 2 1/2 ஆண்டுகளுக்கு முன்பு ஒரு நாள் அதிகாலை 05.00 மணியளவில் அவரது நிலத்தில் அவரும் அவரது கணவரும் இருந்த போது நடந்ததாக சாட்சியம் அளித்துள்ளார். சம்பவ வருடம் தொடர்பாக அ.சா.1-ன் சாட்சியத்தை பரிசீலனை செய்ததில், அவர் இந்நீதிமன்றத்தில் கடந்த 2018 வருடம் சாட்சியம் அளித்துள்ளார். அரசு தரப்பு வழக்கின் படி இவ்வழக்கு சம்பவமானது 2014-ஆம் வருடம் நடைபெற்றுள்ளது. அ.சா.1 சாட்சியம் அளித்த வருடம் மற்றும் சம்பவ வருடத்தை கணக்கீட்டு பார்க்கும் போது இவ்வழக்கு சம்பவமானது சுமார் 3 1/2 வருடங்களுக்கு முன்பு நடைபெற்றுள்ளது என்பது புலப்படுகிறது. அ.சா.1 அவரது சாட்சியத்தில் சம்பவ வருடத்தை பொறுத்து தோராயமாகதான் சாட்சியம் அளித்துள்ளார். எனவே, அவரது சாட்சியத்தின் மூலம் இந்த வழக்கு சம்பவமானது

குறிப்பாக எந்த வருடம் நடைபெற்றது என்பதை தீர்மானிக்க இயலவில்லை. சம்பவ வருடத்தை பொறுத்து அ.சா.2 முதல் அ.சா.4 ஆகியோர்களின் சாட்சியங்களை பரிசீலனை செய்ததில் சம்பவமானது சுமார் 3 வருடங்களுக்கு முன்பு நடைபெற்றதாக அ.சா.3-ம், நான்கு வருடங்களுக்கு முன்பு நடைபெற்றதாக அ.சா.4-ம் சாட்சியம் அளித்துள்ளனர். மேற்படி இரு சாட்சிகளும் கடந்த 2019-ம் வருடம் இந்நீதிமன்றத்தில் சாட்சியம் அளித்துள்ளனர். அவர்களும் சம்பவ வருடம் தொடர்பாக தோராயமாகதான் சாட்சியம் அளித்துள்ளனர். அவர்களின் சாட்சியத்தின் மூலமும் இந்த வழக்கு சம்பவமானது எப்போது நடைபெற்றது என்பதை தீர்மானிக்க இயலவில்லை.

**(8.4)** சம்பவ நேரத்தை பொறுத்து சம்பவமானது மாலை சுமார் 05.00 மணியளவில் நடைபெற்றதாக அ.சா.ஆ.1(குற்ற முறையீடு)-ல் குறிப்பிடப்பட்டுள்ளது. அது தொடர்பாக அ.சா.1 -ன் சாட்சியத்தை பரிசீலனை செய்ததில், அவர் அவரது சாட்சியத்தில் சம்பவமானது அதிகாலை 05.00 மணிக்கு நடைபெற்றதாக சாட்சியம் அளித்துள்ளார். மேற்படி அ.சா.1-னின் இந்த சாட்சியமானது அவர் அளித்த குற்ற முறையீட்டுடன் ஒத்து காணப்படவில்லை. சம்பவ நேரம் தொடர்பாக அ.சா.2 எவ்வித சாட்சியமும அளிக்கவில்லை. அ.சா.3 அவரது சாட்சியத்தில், சம்பவமானது மதியம் சுமார் 03.00 மணியளவில் நடைபெற்றது என சாட்சியம் அளித்துள்ளார். குறுக்கு விசாரணையின் போதும், மேற்படி சங்கதியையே சாட்சியமாக அளித்து அவரது முதல் விசாரணை சாட்சியத்தை உறுதி படுத்தியுள்ளார். எனினும், அ.சா.3-னின் சம்பவ நேரம் தொடர்பான சாட்சியமானது குற்ற முறையீடு மற்றும் அ.சா.1-னின் சாட்சியம் ஆகிய இரண்டுடனும் ஒத்து காணப்படவில்லை. ஏனெனில், குற்ற முறையீட்டின் படி

சம்பவமானது மாலை 05.00 மணிக்கு நடைபெற்றுள்ளது. அ.சா.1-னின் சாட்சியத்தின் படி சம்பவமானது காலை 05.00 மணியளவில் நடைபெற்றுள்ளது. சம்பவ நேரம் தொடர்பாக அ.சா.4 அவரது சாட்சியத்தில் சம்பவமானது மாலை சுமார் 05.00 மணிக்கு நடைபெற்றதாக சாட்சியம் அளித்துள்ளார். எனினும், அவர் குறுக்கு விசாரணையின் போது சம்பவத்தை நேரில் பார்க்கவில்லை என்றும், அது குறித்து தகவல் தெரிந்து அதன் பின்னர் அ.சா.1-ஐயும் அவரது கணவரையும் மருத்துவமனைக்கு அழைத்து சென்றதாக சாட்சியம் அளித்துள்ளார். மேற்படி அ.சா.4-ன் சாட்சியத்தை முழுமையாக பரிசீலனை செய்ததில் அவர் இவ்வழக்கு சம்பவத்தை கண்ணுறவில்லை என்பது புலப்படுகிறது.

**(8.5)** எதிரிகள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் அவருடைய வாதத்தின் போது அரசு தரப்பில் குறிப்பிட்டுள்ளது போல் சம்பவம் நடைபெறவில்லை என்றும், எனவே தான் சம்பவ நாள், வருடம் மற்றும் நேரத்தை பொறுத்து அ.சா.1 மற்றும் அ.சா.3 ஆகியோர்கள் அவர்களது சாட்சியத்தில் அரசு தரப்பு வழக்கை ஒத்துரைக்கும் வகையில் குறிப்பிடவில்லை என்றும், மேலும், அ.சா.2 சம்பவ நேரம் தொடர்பாக எவ்வித சாட்சியமும் அளிக்கவில்லை என்றும் எதிரிகளின் மீது கொண்ட முன்விரோதத்தின் காரணமாக அவர்களை பழி வாங்க வேண்டி அ.சா.1 பொய்யான ஒரு குற்ற முறையீட்டினை அளித்துள்ளார் என்றும் வாதிடப்பட்டது. அ.சா.1-ன் குடும்பத்திற்கும், எதிரிகளுக்கும் இடையே சுமூகமான உறவு முறை இல்லை என்பது வழக்காணவங்களின் மூலம் தெரிய வருகிறது. எனவே, எதிரிகள் தரப்பில் நியாயமான சந்தேகத்தை எழுப்பி உள்ளதாகவே இந்நீதிமன்றம் கருதுகிறது. மேற்படி

சந்தேகத்தை களைந்து அரசு தரப்பு வழக்கில் குறிப்பிட்டுள்ளது போல் தான் சம்பவம் நடைபெற்றது என்பதை நிரூபிக்க வேண்டிய கடமை அரசு தரப்பிடம் உள்ளது. மேற்படி சந்தேகங்களை களையும் வகையிலான சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்களை அரசு தரப்பு இவ்வழக்கில் முன்னிலைப்படுத்தவில்லை. குற்ற வழக்கு பொறுத்தமட்டில் எதிரிகள் மீதான குற்றத்தை நிரூபணம் செய்வதில் சம்பவ நாள், வருடம், நேரம் மற்றும் இடம் ஆகியவைகள் முக்கிய பங்காற்றுகின்றன. இவ்வழக்கில் சம்பவ நாள், வருடம் மற்றும் நேரத்தை பொறுத்து அரசு தரப்பு அதன் வழக்கை நிரூபிக்க தவறியுள்ளது. எனவே, வழக்கின் இதர சங்கதிகளை பொறுத்து பரிசீலனை செய்யாமல் சம்பவ நாள், வருடம் மற்றும் நேரத்தை பொறுத்த சந்தேகத்தை எதிரிகளுக்கு சாதமாக்க இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**முடிவாக** – சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு அளித்து 1-ம் எதிரியை இ.த.ச. பிரிவுகள் 147, 294(b), 323, 324 - ன் கீழும், 2 மற்றும் 3 எதிரிகளை இ.த.ச. பிரிவுகள் 147, 294(b), 323- ன் கீழும், 4-ம் எதிரியை இ.த.ச. பிரிவுகள் 147, 294(b), 323, 506(i) - ன் கீழும், 5-ம் எதிரியை இ.த.ச. பிரிவுகள் 147, 294(b) - ன் கீழும் குற்றவாளிகள் இல்லை என தீர்மானித்து, எதிரிகளை கு.வி.மு.ச பிரிவு 248(1) – ன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கின்றது. மேலும் எதிரிகள் இந்நீதிமன்றத்திற்கு எழுதி கொடுத்திருக்கும் பிணைமுறி ஆவணங்கள் மேல்முறையீட்டுக் காலத்திற்கு பின்பு ரத்தாகி விடும் என்றும் இந்த நீதிமன்றம் உத்தரவிடுகிறது.

**9. சொத்து பற்றிய ஆணை :-** இவ்வழக்கில் வழக்கு சொத்து எதுவும் கைப்பற்றப்படவில்லை, ஆகையால் அதை பற்றிய உத்தரவு எதுவுமில்லை.

இந்த தீர்ப்புரை என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, பின் என்னால் பிழைகள் நீக்கம் செய்யப்பட்டு, 2026 ஆம் ஆண்டு ஜுலை மாதம் 08 ஆம் நாளாகிய இன்று இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய என்னால் பகிரப்பட்டது.

B VIDHYA Digitally signed by B VIDHYA Date: 2026.07.08 18:21:03 +0200

**நீதித்துறை நடுவர்,**
**செஞ்சி**

**பின் இணைப்பு:-**

**அரசு தரப்பு சாட்சிகள்:-**

அ.சா.1 ரோகிணி (புகார்தாரர்)

அ.சா.2 மணி

அ.சா.3 வேலு

அ.சா.4 பெரியசாமி

அ.சா.5 வெங்கடேசன் (மருத்துவர்)

அ.சா.6 ராஜா (உதவி ஆய்வாளர்)

**அரசு தரப்பு சான்றாவணங்கள்:-**

அ.சா.ஆ.1 புகார் மனு

அ.சா.ஆ.2 பார்வை மகசரில் உள்ள 1வது கையொப்பம்

அ.சா.ஆ.3 பார்வை மகசர்

அ.சா.ஆ.4 அ.சா.1-ன் காயச்சான்று

அ.சா.ஆ.5 அ.சா.2-ன் காயச்சான்று

அ.சா.ஆ.6 முதல் தகவல் அறிக்கை

அ.சா.ஆ.7 மாதிரி வரைபடம்

CC.No.160/2015

**அரசு தரப்பு சான்று பொருட்கள் :** - இல்லை

**எதிரிகள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணம்** :- இல்லை

**எதிரிகள் தரப்பு சான்றுபொருள் : -** இல்லை.

B VIDHYA Digitally signed by B VIDHYA Date: 2026.07.08 18:20:53 +0200

நீதித்துறை நடுவர்,

செஞ்சி

**குறிப்பு-**

1. வழக்கின் முடிவு சம்மந்தப்பட்ட காவல் துறைக்கு தெரிவிக்கப்பட்டது.

2. எந்த ஒரு சாட்சியும் 3 தினங்களுக்கு மேல் நிறுத்தி விசாரிக்கப்படவில்லை.

3. விசாரணை காலத்தில் எதிரிகள் பிணையில் இருந்தார்.